எழும்பூர், சைதாப்பேட்டை, திருமங்கலம்

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் பொங்கல் விழா

## நாளை தொடங்குகிறது

சென்னை, ஜன.9–

எழும்பூர், சைதாப்பேட்டை மற்றும் திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையங்களில் பொங்கல் விழா நாளை தொடங்கி 3 நாட்கள் நடக்கிறது.

### பொங்கல் கலை விழா

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் ஆண்டு தோறும் பொங்கல் கலை விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டு நாளை (வியாழக்கிழமை) தொடங்கி 12–ந்தேதி வரை 3 நாட்கள் பொங்கல் கலை விழா நடக்கிறது. இந்த விழா எழும்பூர், சைதாப்பேட்டை மற்றும் திருமங்கலம் ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெற உள்ளது.

இதில், தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெறுகிறது. முதல் நாள் விழா நாளை சைதாப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் மாலை 5.30 மணிக்கு தொடங்குகிறது.

தெலுங்கானாவைச் சேர்ந்த அந்தாசி நாராயணா குழுவினரின் ஆதிவாசிகள் தப்பாட்டமும், 6.30 மணிக்கு திருவாரூர் கே.ஜெகன்நாதன் குழுவினரின் கரகம், காவடி, காளியாட்டம், கொக்கலிக்கட்டை உள்ளிட்ட பல்வேறு நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது. இரவு 7.30 மணிக்கு தஞ்சாவூர் டி.ஜி.ராஜூ குழுவினரின் தப்பாட்டம் நடைபெறுகிறது.

### தெருக்கூத்து

2–ம் நாள் விழா 11–ந்தேதி (வெள்ளிக்கிழமை) எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நடைபெற உள்ளது. இந்த விழாவில், தப்பாட்டம், கரகம் உள்ளிட்ட நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. இரவு 7.30 மணிக்கு தெருக்கூத்து நிகழ்ச்சியும் நடைபெறும்.

3–ம் நாள் விழா 12–ந்தேதி (சனிக்கிழமை) திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் மாலை 5.30 மணிக்கு ஆதிவாசிகள் தப்பாட்டத்துடன் தொடங்குகிறது. 6.30 மணிக்கு துரோணாச்சாரியார், நாட்டியகலா சூடாமணி விஜயம் கார்த்திக் குழுவினரின் பரத நாட்டியம் உள்ளிட்ட பல் சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

பொதுமக்கள், பயணிகள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட அனைவரும் இலவசமாக கலந்து கொள்ளலாம். விழா ஏற்பாடுகளை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் செய்து வருகிறது.